விலை: சதம் 75 ★★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 புரட்டாதி 25 ஜுல்ஹஜ் 12 இதழ் 239
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 11-10-1981

சனிற்றறி வெயார்
(SANITARY WARE)
இறக்குமதி செய்த
கொமேட் (Commode)
சிஸ்ரேண் மூடியுடன்
ரூபா 975/-ல் இருந்து
வாஷ்பேஷின்கள்
இணைப்புகளுடன் ரூபா 475/-ல் இருந்து
மாபிள்கள் P.V.C. பைப்புகள்
மற்றும் இணைப்புகளும்
கிடைக்கும்.
சமுத்ரா ரேட்ஸ் லிமிட்
23/2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7236 (1189)

## விமானக் கடத்தல் 5 வருடக் கடுங்காவல்

வார்சோ, அக். 11

கடந்த ஜுலை மாதம் 21ம் திகதி போலந்து விமானத்தைக் கடத்திய போலந்து பிரஜைக்கு அந்நாட்டு நீதிமன்றம் 5 ஆண்டு கடுங்காவல் தண்டனையை விதித்துள்ளது.

48 பிரயாணிகளுடன் விளையாட்டு துப்பாக்கிமுனையில் விமானத்தைக் கடத்திய குற்றத்திற்காகவே போர்னுட் வியங்கா என்ற அந்த நபருக்கு இத்தண்டனை விதிக்கப்பட்டது. (இ)

# வடக்கில் மூடப்பட்ட பொலிஸ் நிலையங்களிலிருந்து இராணுவம் வாபஸ்!

## பொலிசார் கையேற்றனர்

(யாழ்ப்பாணம்)

**ஆனைக்கோட்டை பொலிஸ்நிலைய தாககுதல் சம்பவத்தை அடுத்து வடபகுதியில் மூடப்பட்ட பொலிஸ் நிலையங்களிலிருந்து இராணுவம் வாபஸ் பெறப்பட்டுள்ளது.**

வாபஸ்பெறப்பட்டுள்ள இராணுவத்தினர் வடபகுதியிலுள்ள இராணுவ முகாம்களுக்கு மீண்டும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

பளை, சங்கானை, குருநகர், ஆனைக்கோட்டை, கோப்பாய், பூநகரி, நெடுந்தீவு ஆகிய பொலிஸ் நிலையங்கள் ஆனைக்கோட்டை பொலிஸ் நிலைய தாக்குதல் சம்பவங்களை அடுத்து மூடப்பட்டு அவற்றில் இராணுவம் நிலைகொண்டிருந்தது.

இராணுவம் வாபஸ் பெறப்பட்டதை அடுத்து அப்பொலிஸ் நிலையங்களை பொலிசார் பொறுப்பேற்றுள்ளனர்.

இப் பொலிஸ்நிலையங்களில், விவாகம் செய்த பொலிசார் குடியிருக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்துவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அரசுக்குக் கொடுத்த ஐந்து அம்சக் கோரிக்கைகளில் வடபகுதி பொலிஸ் நிலையங்களில் தங்கியிருந்த இராணுவம் வாபஸ்பெறப்பட வேண்டுமெனவும் கேட்டிருந்தது தெரிந்ததே. (மா-இ)

## சட்டத்தரணிகள் குழு குட்டிமணியைச் சந்தித்தது

(கொழும்பு)

பனாகொடை இராணுவ முகாமில் காவலில்வைக்கப்பட்டுள்ள குட்டிமணி (யோகச்சந்திரன்)யை சட்டத்தரணிகள் குழு நேற்று சந்தித்தது.

### முதலில் அனுமதி மறுப்பு

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின் பேரில் இச்சட்டத்தரணிகள் குழு இராணுவமுகாமுக்கு நேற்று பிற்பகல் 2-30 மணிக்குச் சென்றபோதிலும் சுமார் ஒரு மணித்தியாலம் வரை சந்தேகநபரைச் சந்திக்க இராணுவ அதிகாரிகள் அனுமதிவழங்கவில்லையாம்.

பாதுகாப்பு அமைச்சிலிருந்து இதுவிடயமாக தமக்கு எதுவித உத்தரவும் கிடைக்கவில்லை என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்ததை அடுத்து அங்கிருந்து பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன்

(6ம் பக்கம் பார்க்க)

## வன்செயல்களுக்கு தவறான பிரசாரமே காரணம்

### சர்வோதய தலைவர் கருத்து

(யாழ்ப்பாணம்)

சிலர் வெளியிடும் அறிக்கைகள் பற்றி நாட்டுமக்கள் மத்தியில் தவறான முறையில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுவதே நாட்டில் அசம்பாவிதங்கள் ஏற்படக் காரணமாகின்றது என்று இலங்கை தேசிய சர்வோதய இயக்கத் தலைவர் திரு. ஏ. ரி. ஆரியரத்ன நேற்று யாழ்ப்பாணத்தில் கூறினார்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வன்செயல்கள் குறித்து தாமும் தென்னிலங்கையிலுள்ள தமது இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் கவலைப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாநாடொன்றில் திரு. ஆரியரத்ன உரைநிகழ்த்தினார்.

யாழ். மாவட்ட சபைத் தலைவர் திரு. எஸ். நடராசா தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில், யாழ். மாவட்ட

6-ம் பக்கம் பார்க்க

## சதாத்தின் ஜனாசா ஆடம்பரமின்றி நல்லடக்கம்

கெய்ரோ, அக். 10

படுகொலை செய்யப்பட்ட எகிப்திய ஜனாதிபதி ஜனாப் அன்வர் சதாத்தின் ஜனாசா இன்று அரச மரியாதைகளுடன் ஆடம்பரம் இன்றி நல்லடக்கம் செய்யப்பட்டது.

இனந்தெரியாத யுத்த வீரர் ஒருவரின் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்ட அமரரின் பூதவுடல் கல்லறையில் வைக்

(6-ம் பக்கம் பார்க்க

வடமாநில தனியார் வாகன சேவைச்சங்கம்
(மினி பஸ் சேவை) யாழ்ப்பாணம்
ஓராண்டு நிறைவு விழா
யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில்
13-10-81 (செவ்வாய்க்கிழமை)
மாலை 2 மணி தொடக்கம்.
தலைமையுரை: திரு. ஏ. பி. ஏ வாஸ்

மன்றத்தின் செயல்பாடுகள் குறித்து விரிவான நடவடிக்கை எடுக்கவிருப்பதால், மன்ற உறுப்பினர்கள் மட்டும் தவறாது சமூகமளிக்குமாறு வேண்டுகிறோம்.
—தலைவர்

விசேட கலை நிகழ்ச்சி
13-10-81 மாலை, ராணி திரையரங்குக்கு முன்னால், ஆண்டு விழாவையொட்டி கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.
பிரதம விருந்தினர்கள்:-
திரு. வெ. யோகேஸ்வரன் (எம். பி. யாழ்ப்பாணம்)
திரு. இ. விசுவநாதன் (யாழ். நகர முதல்வர்)
திரு. ஏ நடராசா (மாவட்டசபைத் தலைவர்)
திரு. எஸ். கனகரத்தினம் (விசேட அதிகாரி வ. பி. போ. சபை யாழ்ப்பாணம்)
பொலிஸ் உயர் அதிகாரிகள்
மாநகர சபை உறுப்பினர்கள். (1209)

## யாழ். நூலகத்துக்கு ரூ. 10 ஆயிரம் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

தீக்கிரையாக்கப்பட்ட யாழ் பொது நூல்நிலையத்துக்கு இலங்கை சர்வோதய இயக்கத் தலைவர் திரு. ஏ. ரி. ஆரியரத்ன, யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதனிடம் 10 ஆயிரம் ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளார். (மா-இ)

லொறிகள் தேவை
வவுனியா, பாவற்குளத்தில் இருந்து காங்கேசன்துறை சீமேந்து தொழிற்சாலைக்கு கிரேசர் கல்லு கொண்டுவருவதற்கு லொறிகள் தேவை. கீழ்க்காணும் விலாசத்திற்கு தொடர்புகொள்ளவும்.
V. M. சண்முகம் அன் பிறதர்
85 ஆஸ்பத்திரி வீதி (1212) யாழ்ப்பாணம்.

காணி விற்பனைக்கு
கண்டி வீதி நாவற்குழி உணவுக் களஞ்சியத்திற்கு முன்பாகவுள்ள அமிர்தா வீதியில் (100 யார் தூரத்தில்) 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
வி. சர்வசக்திவேல்
'ஸ்ரீ லிங்கம்' கைதடிச் சந்தி 1210

விரையுங்கள்! தீபாவளி மலிவு விற்பனை
கௌரிகரமாகத் திகழ்ந்திட கௌரி ரெக்ஸ்ரைல்ஸ் பிடவைகளை நாடுங்கள்!
கௌரி ரெக்ஸ்ரைல்ஸ்
155 156, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7457. (1189)

யாழ். பரியோவான் கல்லூரி

# இன்ரறக்கழக உறுப்பினர் இரத்ததானம் வழங்கினர்

[அரியாலை]

யாழ். பரியோவான் கல்லூரியில் சேவை செய்து வரும் "இன்ரறக் கழகம்" பொதுச் சேவையுடன் உயிரைக் காக்கும் இரத்த தானத்தையும் வருடா வருடம் செய்து வருவது பாராட்டுதற்குரியதாகும். கழக அங்கத்தவர்கள் இரத்த தானம் செய்வதன் மூலம் பிறரின் உயிரையும் காப்பாற்றும் பணியையும் செய்கிறார்கள்.

இவ்வாறு வைத்திய கலாநிதி திருமதி இராச இராசேந்திரன் யாழ். பரியோவான் கல்லூரியில் இன்ரறக்கழக அங்கத்தவர்கள் இரத்ததானம் செய்த வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கழகத்தைச் சேர்ந்த 34 அங்கத்தவர்கள் இரத்ததானம் செய்தனர். கழக அங்கத்தவர்கள் செல்வன் ஸ்கந்தா அரைலிங்கம் 550 மில்லி லீற்றர் இரத்தத்தை இரத்த வங்கிக்கு வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். [அ]

## எதிரிக்கு ரூ. 150 அபராதம்

(சாவகச்சேரி)

அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமாக மரம் கொண்டுவந்ததாக குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் சாவகச்சேரி நீதிபதி கே. வி. விக்னேஸ்வரன், எதிரியான கு. கனகசபைக்கு 150 ரூபா அபராதம் விதித்து மரங்களை பறிமுதல் செய்ய உத்தரவிட்டார். [அ]

## சைவசமய வட்டவிழா

[சாவகச்சேரி]

ஆத்மஜோதி முத்தையா அடிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சைவசமய வட்ட விழா இராமாவில் தோறும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. [அ]

## கோமகன் பரிசு வழங்குவார்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் பரிசளிப்பு விழா இம்மாதம் 22ம் திகதி கொழும்பில் நடைபெற இருக்கிறது.

இப் பரிசளிப்புவிழாவில் எடின்பரோ கோமகன் பிலிப் அவர்கள் கலந்துகொண்டு பரிசில்களை வழங்குவார்.

இளைஞர் விவகார வேலைவாய்ப்பு அமைச்சர் திரு ரணில் விக்கிரமசிங்கா இவ்விழாவை ஒழுங்குசெய்துள்ளார்.

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. எஸ். நடராசாவுக்கும் இப் பரிசளிப்புவிழாவில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் முக்கிய அலுவல்கள் காரணமாக தாம் கலந்துகொள்ள முடியாமலிருக்கிறதென மாவட்ட சபைத் தலைவர் அறிவித்துள்ளதாக தெரிகிறது. (மா)

## அடியார்கள் நடை பவனி

[சாவகச்சேரி]

தென்மராட்சி சைவ மகா சபை நிவ்விய ஜீவன சங்கத்து சார்பில் வல்லிபுர ஆழ்வார் கோவிலுக்கு நடை பவனி சென்றது. சாவகச்சேரி, சரசாலை ஆகிய இடங்களிலிருந்து பல அடியார்கள் கலந்துகொண்டனர்.

### விற்பனைக்கு

இஸ்சுசூ E. L. F. றக்
யப்பானில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டது
விற்பனைக்கு உண்டு.

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**

31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(1182)

# வரி விளம்பரம்

### தேவை

தேவகியின் மில்லில் வேலை செய்வதற்கு ஆண்களும் தேவகி தயாரிப்புகளை பைக்கற் செய்வதற்கு பெண்பிள்ளைகளும் தேவை. தேவகி மில், 159/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [1190]

### TO LET

Annex, high grade, low grade, respectable couple, one or two children, 19, Kadaichamy Road, off Navalar Road. 1186

### FOR SALE

Modern house with all facilities. Best residential area. Five minutes walk to town, hospital, and schools. Highest offer considered. NO BROKERS. Contact:- Mrs. V. Rasarathenam, 144/3, Brown Road, Jaffna. 1196

## லொறி திருத்துவதற்கான கேள்வி

எமது சங்க இரண்டு டீசல் லொறிகள் திருத்துவதற்கான கேள்வி பதிவு செய்யப்பட்ட கராஜ் உரிமையாளரிடமிருந்து கோரப்படுகிறது. 16-10-81-ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்குமுன்பு கிடைக்கக் கூடிய வகை விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். சங்கக் காரியாலயத்தில் வேலை நாட்களில் லொறிகளைப் பார்வையிடலாம்.

தலைவர்,
மானிப்பாய்
பரிஷ் லொறோக்குக்
கூட்டுறவுச் சங்கம்.
(1195)

### ICMA

MAY 1982

மேற்படி பிரிவு A பரீட்சைக்கான போதனா வகுப்புகள் 25-10-1981ல் ஆரம்பமாகின்றன.

விபரங்கட்கு:

அதிபர்,
**Percivall Hall**
சப்பல் வீதி
யாழ்ப்பாணம்.
1184

### விற்பனைக்கு

12-10-81 வல்லிபுர ஆழ்வார் ரதோற்சவத்திலிருந்து மிகச்சிறந்த விளம்பர விற்பனை வாசலத்தில் மின் வைற் உற்பத்திகளைச் சகாய விலையில் நீங்கும் பொருட்களுடன் பெற்றுக் கொள்ளலாம். மேலும் தொகையைக் கொடுத்து நீங்கும் பொருட்களைப் பெற்றுக்கொள்ளவும். விரைவில் கூடிய பயன் தரக்கூடிய நல்ல இன தென்னம் பிள்ளைகளும் விற்கப்படும். மின்வைற் - யாழ்ப்பாணம். 1194

சுதுமலை வடக்கு அம்மன் கோவிலுக்கு அருகாமையில் 2 பரப்பு வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: பொ. நடராஜா, குமரக்கோட்டம், சுதுமலை வடக்கு, மானிப்பாய். (1171)

செல்லமுத்து வீதியில் மானிப்பாய் இந்துக்கல்லூரி, அரசாங்க ஆஸ்பத்திரி என்பவற்றுக்கு அண்மையில் ஏழு பரப்புக் காணி வீட்டுடன் (9 அறைகள் கொண்டது) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: R. சேனாதிராஜா, சே/பா R. நடராஜா, தபால் அதிபர், பீலியத்தலை அல்லது R. தேவராஜா, "ராஜசிறி", பழைய தபால் கந்தோர் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (பெடின்சன் கின், கச்சேரி, யாழ்ப்பாணம் 1180

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் 2 பரப்பு வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு உடன் தொடர்பு கொள்ளவும். நா. குணபாலன், இல. 9, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1179

அரியாலையில் கொட்டுக்கிணற்றுப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் 65 பரப்பு வயல்காணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க. ஜே. எஸ். அரியரட்ணம், 71/1, கோவில் வீதி, யாழ்ப்பாணம். 1152

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் புனித பரியோவான் திரு அருகாமையில் ஒன்றரைப் பரப்புக் காணி விற்பனைக்குண்டு விபரங்களுக்கு எஸ் எம். பிரான்சிஸ் சட்டத்தரணி, 5-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7670. (1200)

## அறிவித்தல்

வடபகுதி பதனிடப்பட்ட கடல் அட்டை, சுறுச் செட்டை, மீன் நெட்டி விற்பனையாளர்களுக்கு

### நற்செய்தி

வடபகுதியில் பெறப்படும் பதனிடப்பட்ட கடலட்டை, சுறுச்செட்டை, மீன்நெட்டி ஆகியவற்றை கொள்வனவு செய்து ஏற்றுமதி செய்ய சிங்கப்பூர் ஏ. கே. என். இன்டர்றேட்(எஸ்) பிரைவேட் லிமிட்., (A. K. N. Intertrade(s) Private Ltd., Singapore) நிறுவனத்தின் இலங்கை பிரதிநிதியாகிய நாங்கள் அசோக்ஸ் எக்ஸ்போட்ஸ் கொழும்பு (Ashoks Exports Colombo) 1-11-1981 முதல் இல. 11/5, கச்சேரி கிழக்கு ஒழுங்கை யாழ்ப்பாணத்தில் கொள்வனவு நிலையம் ஒன்றை இயக்கவுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம். மேற்குறிப்பிட்ட பொருட்களை எத்தொகையாயினும் நல்ல விலைக்கு விற்பனைசெய்ய விரும்புவோர் தற்காலிக முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

# அசோக்ஸ் எக்ஸ்போட்ஸ்

தபால்பெட்டி இல. 779,
22 3/4, குவாறி றோட், கொழும்பு - 12. போன்: 33425
1202

## இதயம் நிறைந்திருக்கும் எண்ணற்ற பொருட்களுக்கு விரைந்திடுவீர்

- ஆச்சர் சைக்கிள் றேகுலேற்றர்
- அம்பர் சங்கவீச்
- றெட்சாம் அயன்
- சாவிகைபோல் கவர்ச்சிமிக்கும் வர்ண விளக்குகள்
- றேடியோக்கள்
- கஸெட்டுகள்
- மின் அடுப்புகள்
- அலங்காரப் பொருட்கள்
- மின் விசிறிகள்
- மணிக்கூடுகள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- கல்குலேற்றர்கள்

- ✶ பேப்பர் வகைகள்
- ✶ பாடசாலை உபகரணங்கள்
- ✶ மின்சார இணைப்புக்கள்
- ✶ எஸ்-லோன் பைப்வகைகள்

- நியுஸ் பிரிண்ட்
- பேங் பேப்பர்
- வைற் பிரின்டிங்
- இறேப்
- ஈகு பேப்பர்கள்
- கடித உறைகள்
- டைப்பிங், டுப்பிளிக்கேற்
- வெடிங் காட்டுகள்
- பொலித்தீன் வர்ணமைகள்

இன்னும் எத்தனையோ பொருட்களுக்கும் ஒரே ஸ்தாபனம்!

வடஇலங்கையில் இறக்குமதியாளரும், நிகரற்ற ஒப்பந்தகாரரும்

# அம்பலவாணர் அன் சன்ஸ்

(தேசிய வீடமைப்பு கட்டுமானப்பன அங்கீகாரம் பெற்ற வியாபாரிகள், மின்சார இணைப்பு ஒப்பந்தகாரர் - விற்பனையாளர்)

196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 8291, தந்தி: 'வாணர்சன்ஸ்'
(கடைத்தெரு பிள்ளையார் கோவில் எதிரில்)

தலைமையகம்:

பேள் லேட்ஸ்-அம்பலவாணர் சன்ஸ்,
78, மலிபன்வீதி, கொழும்பு 11. போன்: 24821 - 28244
லெட்சுமிபவான், 97, ஓல்ஹெராட் மாவத்த, கொழும்பு 11.

தமிழ் நாடகக் கலைஞர்கள், நாடக மன்றங்கள்

## விபரத் திரட்டு

பிரதேச அபிவிருத்தி, இந்துசமய இந்து கலாச்சார தமிழ் அலுவல்கள் அமைச்சு

இலங்கைத் தமிழ் நாடகக் கலைஞர்கள், மன்றங்கள் பற்றிய விபரத்திரட்டு ஒன்றினை வெளியிடுவதற்கான முயற்சியினை இவ்வமைச்சு மேற்கொள்ளவிருக்கின்றது.

கலைஞர்கள், மன்றங்கள் தமது விபரங்களை இதற்கான படிவத்தில் பூர்த்தி செய்து அனுப்பி வைக்குமாறு இவ்வமைச்சு கேட்டுக்கொள்கின்றது.

படிவங்களைப் பின்வரும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து

சமர்ப்பித்தற்கான இறுதித் திகதி 31-12-81

முகவரி:

தமிழ் அலுவல்கள் பணிப்பாளர்
பிரதேச அபிவிருத்தி அமைச்சு
244, காலி வீதி, கொழும்பு- 4
(1201)

# புள்ளிவிபரங்களும் குருதியும்!

புள்ளி விபரங்கள் இரத்தம் சொட்டுவதில்லை என ஆர்தர் கேஸ்லரின் பிரபல நாவலில் ('நண்பகலில் கும்மிருட்டு') வரும் ரூபிஷோங் என்னும் பாத்திரம் குறிப்பிடுகின்றது.

ஸ்டாலின் ஆட்சிக்கால களையெடுப்பை பகைப்புலமாய்க் கொண்ட இந்த நாவலின் முக்கிய பாத்திரத்தின் கூற்றுத்தான் நினைவிற்கு வருகின்றது. நிதியமைச்சர்களின் உரைகளையும் பொருளியல் அறிஞர்களின் கட்டுரைகளையும் வாசிக்கும் போது.

இதற்கு நேர்மாருன அனுபவம் ஏற்பட்டது மூன்றும் உலக பொருளியலாளரின் இரண்டாவது மகாநாட்டில் பிடல் காஸ்ரோ ஆற்றிய உரையை (இன்டர் கொன்டினன்ரல் பிரஸ் யூன் 8) வாசித்தபோது.

இந்த மகாநாட்டில் ஆபிரிக்கா, ஆசியா, இலத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட பொருளியல் அறிஞர்கள் கலந்து கொண்டனர்.

தொடக்கவுரையை நிகழ்த்திய காஸ்ரோ குறை அபிவிருத்தி நாடுகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள், இவற்றிற்கான காரணிகள், இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் குறித்து தெட்டத் தெளிவாகவும், ஆணித்தரமாகவும் கருத்துக்களை வெளியிட்டார்.

காஸ்ரோவும் புள்ளிவிபரங்களைத் தாராளமாகக் கையாளுகிருர்; அவை பிரச்சினைகளின் மையத்தைத் தொடுகின்றன. 1970-78 ற்கும் இடையில் பல்தேசிய வணிகக் கூட்டுத்தாபனங்கள் குறை அபிவிருத்தி நாடுகளில் முதலீடு செய்த ஒவ்வொரு புதிய டாலருக்கும் சராசரி 2.4 டாலர்களை ஆதாயமாகக் கொண்டு சென்றன என்ற புள்ளிவிபரத்தை காஸ்ரோ மேற்கோள் காட்டும்போது எம்மை வாட்டும் நோய்க்கிருமிகள் எங்கிருந்து வந்தன என்பது புலனாகின்றது. இதே காலகட்டத்தில் அமெரிக்கா இந்நாடுகளிலே செய்த ஒவ்வொரு டாலர் முதலீட்டுக்கும் சராசரி 4.5 டாலர்களை வருமானமாகப் பெற்றது.

## சுரண்டலே முக்கிய காரணம்

மூன்றும் உலக நாடுகள் இன்று வறுமையில் உழல்வதற்கு செல்வந்த நாடுகளின் சுரண்டலே முக்கிய காரணம் என்பதை இப்புள்ளி விபரங்கள் தெளிவாக்கின்றன. இந்த உண்மையைத்தான் இலத்தீன் அமெரிக்க பொருளியலாளர் ஆன்ரே குன்டர்பிராங்க் 'குறை அபிவிருத்தி' என மிகப் பொருத்தமாகச் சுட்டினுர்.

உலகவங்கியிலும் அதன் சோடியான சர்வதேச நாணயச் சபையிலும் கண்மூடித்தனமான நம்பிக்கை வைத்திருப்பவர்களுக்கு காஸ்ரோவின் கூற்றை ஒப்புவிக்க விரும்புகிறேன்; "சர்வதேச நாணயச்சபை பல்தேச வணிகக் கூட்டுத்தாபனங்களின் போலிஸ்காரனுக செயற்படுகிறது."

## காஸ்ட்ரோவின் கருத்து

அபிவிருத்தியென்றுல் பொருளாதாரத்துறை வளர்ச்சியே என்ற தவருன எண்ணத்தை காஸ்ரோ சாடுகிருர் "அபிவிருத்தியென்றல் பொருளாதாரத்தை சார்ந்தது மட்டுமன்று சமூகத்தையும் சார்ந்தது. திரிபுற்ற அல்லது சார்ந்தநிலை பொருளாதார வளர்ச்சி ஏற்படலாம் ஆனால் விரும்பிய குறிக்கோள்களை எய்துவதற்கு இதுவழி வகுக்காது செம்மையான பொருளாதார சமூகக் கொள்கை மனிதனையே குவிமையமாகக் கொள்ள வேண்டும். தவறின், அபிவிருத்தியும் ஏற்படாது, சமாதானமும் நிலவாது"

மூன்றும் உலக நாடுகளை பீடித்திருக்கும் நோயைக் (வறுமை, குறை அபிவிருத்தி) குணப்படுத்துவதற்கான வழிவகைகளையும் (கல்வி - சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு கல்வியே அடித்தளம்' - நில உடைமைச் சீர்திருத்தம் - உழவனுக்கே காணி சொந்தமாயிருத்தல் வேண்டும்' - அரசியல் அதிகார மாற்றம் - 'அரசியல்' அதிகாரம் ஒரு சிலரின் கைகளிலிருந்து படைப்பாற்றல்மிக்க பெரும்பாலோரின் கைகளுக்கு மாறவேண்டும்' - ஆயுதப்பரிகரணம் - ஆயுதப்போட்டி தற்கொலைமயமானது. அது தொடருமானுல் அனைத்துலகப் பொருளாதார நெருக்கடியை அது படுமோசமாக்கும்' - அவர் சுட்டத்தவறவுமில்லை.

காஸ்ரோ கூறியிருப்பவற்றில் அப்படி புதுமையொன்றுமில்லை. அப்படியிருந்தும் அவரது உரை எமது மனதைத் தொட்டு மனச்சாட்சியைத் தட்டியெழுப்புகின்றதென்றுல் அதற்குக்காரணம் அவர் புள்ளிவிபரங்களை அல்ல மனிதனை முதன்மைப்படுத்துவதே.

இத்தகைய அணுகுமுறையைக் கையாள்பவர் தலைமை தாங்கிய புரட்சி வெற்றி ஈட்டியதில் வியப்பில்லை.

அப்புரட்சிக்குக் காஸ்ரோதான் -உத்தியோகபூர்வ கம்யுனிஸ்ட்கட்சி அல்ல, - தலைமை தாங்கினுர் என்பதும் மனங்கொள்ளத்தக்கது

**வெளியான்**

# "சமயவாழ்வுக்குத்தம்மை அர்ப்பணித்த பெரியார்"

(சாவகச்சேரி)

"வரணி வடக்குச் சைவப் பிரகாச வித்தியாசாலையிற் கல்வி கற்றுத்தேறிப்பின் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் ஆசிரியப் பயிற்சியை முடித்துச் சில காலம் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் தனது கடமையைச்செய்தார். இவருடைய திறமையை அறிந்து வரணிப் பெரியார்கள் இவரை வறணிச் சைவப் பிரகாச வித்தியாசாலைக்கு அதிபராக நியமிக்க வழிசெய்தனர்."

பண்டிதர் பொன். வேலுப்பிள்ளையின் மறைவையொட்டிய இரங்கலுரையில் அதிபர் சி. பொன்னையா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து குறிப்பிட்டதாவது;-

அமரர் பண்டிதர் பொன். வேலுப்பிள்ளை வரணியிலுள்ள கும்பிட்டான்புல விநாயகர் ஆலயத்திருப்பணிக்கு நாள்தோறும் தொண்டுசெய்துவந்தார். உயர் வகுப்பு மாணவர்களை உருவாக்கிய பெருமை இவருக்கே உண்டு இவரிடம் கல்விகற்ற மாணவர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் உத்தியோகம் பார்க்கிருர்கள். சிறந்த சமய பக்திமாஞகிய இவர். புராண வகுப்புக்களையும், சமயதீட்சை சைவப்பிரசங்கங்கள் என்பனவற்றை நடத்தினுர்.

இவர் வரணி வடக்கு ஐக்கிய பண்டகசாலை, சனசமூக நிலையம், கிராம முன்னேற்றச் சங்கம் என்பவற்றிற்கு முன்னேடியாக உழைத்து அமரத்தும் எய்தினுர். இவரின் மறைவு சிறப்பாக வரணிக்கும் பொதுவாகத் தென்மராட்சிக்கும் பேரிழப்பாகும்." (அ)

## துணி பதனிடும் ஆலை இயங்காததினல் மின்தறி ஆலைகள் பாதிப்பு

(சுண்டிக்குளி)

தோண்டாவில் துணி பதனிடும் ஆலை இன்னும் செயல்படத் தொடங்காத காரணத்தினுல் யாழ். மாவட்டத்தில் உள்ள ஏனைய மின்தறி ஆலைகளும் இயக்க முடியாத நிலையில் இருப்பதாக யாழ். கூட்டுறவு ஊழியர் சங்க செயலாளர் திரு. த ஜெயச்சந்திரன் தெரிவித்தார்.

சுமார் 160 லட்சம் பெறுமதியான இவ்வாலையில் மின்தறி துணிவகைகள் மட்டும் பதனிடப்படவுள்ளதாகவும் இவ்வாலைக்காக இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரசாதனங்களின் பெட்டிகள்கூட இன்னும் திறக்கப்படாத நிலையில் உள்ளதாகவும், இதற்காக இறக்குமதி செய்யப்பட்ட 'கொதி உலை' இன்றுவரை நிறுத்தப்படாமல் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பெண் தொழிலாளர்களுக்காகக் கட்டி முடிக்கப்பட்ட விடுதியை அவர்கள் முழுமையாகப் பாவிக்க அனுமதி வழங்கப்படாத காரணத்தினுல் அவர்கள் பெருமளவு பணத்தை பிரயாணத்திலும், தனியார் விடுதி வாடகையிலும் செலவிடுவதாக அவர் தெரிவித்துள்ளார். (க)

### "மக்களைப் பாதுகாக்க வேண்டும்"

சாவகச்சேரி

பாவனையாளர் பாதுகாப்பு சங்க உறுப்பினர்களின் ஒத்துழைப்போடு வியாபாரிகள், தரகர்களின் சுரண்டலிலின்றும் மக்களைப் பாதுகாக்க வேண்டும்.

சாவகச்சேரி தெற்கு பாவனையாளர் சங்க வருடாந்தக் கூட்டத்தில், உதவி அரசாங்க அதிபர் திரு. க. துரைராஜா மேற்கண்டவாறு கூறினுர்.

உதவி அரசாங்க அதிபர் தொடர்ந்து பேசுகையில், பாவனையாளர் சங்க பணிகள் பற்றி தெரிவித்தார்.

க

### மட்டக்களப்பு புதியரயில் நிலையம் 31-ல் திறக்கப்படும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் புதிதாக நிர்மானிக்கப்பட்டுள்ள புகையிரத நிலையத்தைத் திறந்து வைக்கும் பொருட்டு போக்குவரத்து அமைச்சர் ஜனுப் எம் எச். மொகமட் இம்மாதம் 31-ம் திகதி மட்டக்களப்பிற்கு விஜயம் செய்வார்

அன்றையதினம் அமைச்சர் மட்டுநகர் பஸ் நிலைய முதற் கட்டிடத்தையும் திறந்து வைப்பார்

## 'ரியுஷன்' எடுப்பதும் இன்று ஒருநாகரிகம்!


(ஊரைதீவு)

"இன்று இந்தப் பாடசாலையின் வளர்ச்சியைப் பார்க்கும்போது மிக்க மகிழ்ச்சியேற்படுகிறது. முன்பு நாங்கள் தமிழ் மொழியைத்தவிர சகல பாடங்களையும் ஆங்கிலத்தில் படிப்பித்தோம். அதற்காக மாலையில் விசேட ஆங்கில வகுப்புகளை நடத்துவோம்."


இவ்வாறு வேலணை மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு செ. குணபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னுள் அதிபர் திரு. ஏ கே. கந்தையா குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், 'இன்று ரியூஷன்' எடுப்பது நாகரீகமாக வளர்ந்துவருகிறது. மாணவர்கள் ஆசிரியர்களை தமது பெற்றோர்போல மதித்து கல்வி கற்கவேண்டும்" என்ருர். (கு)

## சைவ மகாநாடு இறுதிநாள் நிகழ்ச்சி



கருணுகரன்



ஜெயதேவி



இரஞ்சினி

(யாழ்ப்பாணம்)

யாழ், சைவ பரிபாலனசபையினரால் கடந்த ஆண்டு அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட சைவசமய பரீட்சையில் தோற்றி பரிசுபெற்றோருக்கு சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்று வரும் சைவ மகாநாட்டின் இறுதி நாளான இன்று பரிசு வழங்கப்படும்.

இப்பரீட்சையில் தங்கப் பதக்கம் பெற்றோர் விபரம் வருமாறு:-

செல்வன் வி கருணுகரன் (யாழ். இந்துக் கல்லூரி-10-ம் வகுப்பு), செல்வி ம ஜெயதேவி (கொக்குவில் இந்துக் கல்லூரி- 8-ம் வகுப்பு), செல்வி இ. இரஞ்சனி (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி-9-ம் வகுப்பு).

இன்றைய நிகழ்ச்சிகள்:- கல்வியதிகாரி திரு. கு.சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும். காலை நிகழ்ச்சியின் போது திரு. பொ. இரகுபதி உரையாற்றுவார். சைவபரிபாலன சபைத் தலைவர் திரு. செல்வராசா தலைமையில்நடைபெறும்.

மாலை நிகழ்ச்சிகளின்போது ஆறுமுகநாவலர் பெருமானின் இலக்கணச்சுருக்கம் நூலை வடமாநில கல்விப்பணிப்பாளர் வெளியிட்டு வைப்பார். திரு மு. மயில்வாகனத்தின் சேவை நலம் பாராட்டுவிழா நடைபெறும். செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி விரிவுரை நிகழ்த்துவார். (இ)

### நூல்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பொது நூலகத்துக்கு யாழ்ப்பாணம் ஜம்மா அதே இஸ்லாமியப் பயிற்சி மன்று பெறுமதிமிக்க நூல்களை அன்பளிக்கவுள்ளது.

இம்மாதம் 15ம் திகதி ஜும்மாப்பள்ளிவாசலில் வைத்து யாழ் மாநகர முதல்வரிடம் இந்நூல்கள் கையளிக்கப்படவுள்ளன. (மா)

### இராணுவப் பொறுப்பதிகாரிக்கு புகார்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு சந்தைப்பகுதியில் இரவு வேளைகளில் ஆயுதப்படையினரின் செயல்களினுல் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக பலாலி இராணுவ முகாம் பொறுப்பதிகாரிக்கு மகஜர் ஒன்றின் மூலம் புகார் செய்யப்பட்டுள்ளது.

வீதியில் செல்லும் சைக்கிள், கார், மினிபஸ் ஆகிய வாகனங்களை தகுந்த காரணம் எதுவுமின்றி மறித்து அவற்றின் ரயர்களின் காற்றை இவர்கள் திறந்து விடுவதாகவும், தாக்குதல் நடாத்துவதாகவும் இப்புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை இந்தியர்பற்றி இந்திராவுடன் நெடுமாறன் பேசுவார்!

## சென்னை திரும்பியபின் வெளியிட்ட கருத்து

சென்னை அக் 10

இலங்கைக்கும் இந்தியாவிற்கு மிடையிலான ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தம் இவ்வாண்டு காலாவதியாவதால் இதுகுறித்து இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியுடன் பேச்சுவார்த்தை நடத்துவுள்ளேன். 5 லட்சம் தமிழர்களை இந்தியாவிற்கு திருப்பியனுப்புவதற்கு இலங்கை அரசு உத்தேசித்துள்ளது".

மேற்கண்டவாறு தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. பீ. நெடுமாறன் இலங்கையில் பத்துநாள் சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண்டு அங்கு இடம்பெற்ற வன்முறைகள் பற்றி அறிந்து கொண்ட பின்னர் சென்னை திரும்பி நிருபர்களிடம் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இவர் அங்கு மேலும் தெரிவித்தாவது!

"இந்தியாவிற்குத் திரும்ப விரும்பாத தலைவர்களையும் இலங்கை அரசு திருப்பியனுப்பவுள்ளது. இதனால் நாலு ஐந்து தலைமுறைகளாக இலங்கையில் குடியேறியுள்ளவர்களுக்கு பிரச்சினை ஏற்படும்". என்றார்.

தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. பீ. நெடுமாறன் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்து இங்கு இடம்பெற்ற வன்முறைகள் பற்றி தமிழர் விடுதலை கூட்டணி தலைவர்களைச் சந்தித்து விபரங்களை கேட்டறிந்து கொண்டது தெரிந்ததே.

## கண்டுபிடிப்பு

புதுடில்லி அக் 10

பம்பாய்க்கு அருகே பாதரசம் கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. முன்னர் கர்நாடகம் கேரளம் ஆகிய மாநிலங்களில் பாதரசம் கண்டுபிடிக்கப்பட்டமை தெரிந்ததே. (லே)

விமானக்கடத்தல் மூலம்


## காலிஸ்தான் பிரச்னை முக்கியத்துவம் பெறவில்லை

### இந்திரா கருத்து

புதுடில்லி அக். 10

"இந்தியாவும் [illegible] நாடுகளும் வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் அவற்றுடன் பரஸ்பர ஒத்துழைப்பை வளர்த்துக் கொள்ளவே இந்தியா விரும்புகிறது" மேற்கண்டவாறு இந்திய பிரதம மந்திரி திருமதி இந்[illegible]

(5ம் பக்கம் பார்க்க)




# நெஸ்பிறே

## வளரும் பருவத்திற்கு வாய்த்த பால்.

இவர்கள் கருத்தூன்றிப் படிக்கிறார்கள்... அறிவுக் கூர்மைக்கு ஆரோக்கியமான உடலும் தேவை. உங்கள் பிள்ளைகளுக்கு நெஸ்பிறே கொடுங்கள். காலை உணவின்போது, படுக்கைக்கு முன் அல்லது எந்நேரம் வேண்டுமானாலும் கொடுக்கலாம். குறிப்பாக, படிப்பில் விசேஷ கவனம் செலுத்தும் போது அவர்களுக்கு நெஸ்பிறே தேவை.

நெஸ்பிறே – உலகின் தலைசிறந்த பண்ணைகளில் இருந்து கிடைக்கும் சுத்தமான முழு ஆடைப் பால் மா. சுகாதார முறைப்படி பதனிடப்பட்டது; 28 சத வீத பால் கொழுப்பும் விற்றமின் 'ஏ','பி' சத்துகளும் கொண்டது.




**நெஸ்பிறே**

வளரும் பிள்ளைக்கு வளமூட்டும் பால்.

400 கிராம் ரூ. 22/50
1 கிலோ ரூ. 78/75

Nestlé

ஒரு நெஸ்லே தயாரிப்பு

# கடலட்டை ஏற்றுமதிமூலம் 37 லட்சம் ரூபா அந்நியசெலவாணி

(பண்டத்தரிப்பு)

சிங்கப்பூருக்கு கடலட்டைகளை ஏற்றுமதி செய்ததன் மூலம் இவ்வாண்டில் மானிப்பாய்த் தொகுதி கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம் 37 இலட்சம் ரூபா அந்நியச் செலவணியை பெற்றுள்ளது.

இச்சங்கத்தின் பொதுமுகாமையாளர் திரு. எம். குணரத்தினம் இத்தகவலைத் தெரிவித்துள்ளார். பங்களாதேஷிற்கு சங்குகளை ஏற்றுமதி செய்ததன் மூலம் இவ்வருடத்தில் இரண்டு இலட்சம் ரூபா அந்நியச் செலவணி கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இச்சங்கம் கடலட்டைகளையும், சங்குகளையும் யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாஜத்திற்கு ஊடாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்து வருகின்றது.

# வழிபடச் சென்றபெண்ணின் தாலிக்கொடி கொள்ளை

மாவிட்டபுரம்

கோவிலுக்கு வழிபடச் சென்ற பெண்ணின் தாலிக்கொடி இனந்தெரியாதவர்களினால் கொள்ளையடிக்கப்பட்டது. இச்சம்பவம் மாவிட்டபுரத்தில் இடம்பெற்றது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கு வெள்ளிக்கிழமை வழிபாட்டுக்காகச் சென்றிருந்த மாவிட்டபுரத்தைச் சேர்ந்த திருமதி கந்தையா என்னும் பெண்ணின் தாலிக்கொடியை இனந்தெரியாதவர்கள் அறுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தார்களாம்.

இப்பெண் கூக்குரலிடவே பொதுமக்கள் நாலாபக்கமும் தேடிச் சென்றும் திருடர்கள் அகப்படவில்லை.

# 'இலக்கியத்திற்கு சமூக பொறுப்புண்டு'

(காரதீவு)

இலக்கியத்துக்கு மட்டுமின்றி சமூகத்திலும் கட்டுப்பாடுகள் அவசியமாகவே இருக்கின்றன கட்டற்ற சுயாதீனத்தை அனுமதிக்க முடியாத அதேவேளையில் கொச்சைத்தனமான அழிவுத்தன்மையுள்ள கட்டுப்பாடுகள் தவறானவையேயாகும் இவ்வாறு யாழ். நிம்மி பண்டில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய கவிஞர் நுஃமான் குறிப்பிட்டார்.

திரு. ஏ. ஜே. கனகரத்தினாவினால் மொழிபெயர்க்கப்பட்டு அலை இலக்கிய வட்டத்தினரால் வெளியிடப்பட்ட மார்க்சிசமும் இலக்கியமும் சில நோக்குகள் என்ற நூல் இக்கூட்டத்தில் வெளியிடப்பட்டது.

திரு. ஆ. சபாரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொடர்ந்து பேசிய திரு நுஃமான் மார்க்சிசம் பற்றி முரண்பட்ட அரசியல் கருத்துக்கள் மார்க்சிசவாதிகள் எனக்கூறப்படுவோர் கடைப்பிடிப்பது போல மார்க்சிச எழுத்தாக்களின் ஆதரவாளர்களும் பல வகைகளில் தம்முள் வேறுபாடுகளைக் கொண்டிருக்கிறார்கள். அவர் தொடர்ந்து பேசிய போது இலக்கியத்துக்கு சமூகப்பொறுப்பு உண்டு உருவமா உள்ளடக்கமா முக்கியம் என்று வாதிடுவதை விடுத்து இவை இரண்டினதும் இயைவு அவசியம் என்பதை கருத்திற் கொள்வதே நன்மை தரும் எனக்கூறினார்

திருமதி நிர்மலா நித்தியானந்தன் தமது ஆய்வுரையில் மார்க்சிச கட்டுப்பாடுகள் இலக்கிய உலகை ஆட்சி புரியமுற்படுவது புராதன காலத்தில் இருந்த சமயவாதிகளின் தூய்மை வாதத்துக்கு ஒப்பான ஒரு பிற்போக்குச் செயலாகும் என்றார் இதனை தொடர்ந்து மு. புஸ்பராஜன், எஸ். வில்வரத்தினம் ஆகியோரும் பேசினர் திரு. சி. ஜே. ஜெறிஸ்ரியன் நன்றி கூறினார்.

மரணவீட்டில்

# துக்கம் கொண்டாட வந்து நகை திருடினர்களாம்

## மூன்று பெண்கள் றிமாண்டில்

(மாவிட்டபுரம்)

மரணவீடொன்றுக்குச்சென்று துக்கத்தில் கலந்து கொண்ட மூன்று பெண்கள் அவ்வீட்டிலிருந்த 62 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளை வெகு சாதுரியமாக திருடிச் சென்றனராம், பெரும்பகுதி நகைகள் மீட்கப்பட்டதுடன் இந்த மூன்று பெண்மணிகளும் கைதாகி றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது! மயிலிட்டியைச் சேர்ந்த இராசா தவானந்தன் என்பவரது வீட்டில் மரண வீடு ஒன்று சிலவாரங்களுக்கு முன் நடைபெற்றது. அவர்களது இனத்தவர்களான மயிலிட்டியைச் சேர்ந்த 3 பெண்மணிகள் (தாயும் இரு மகள் மாரும்) இம்மரண வீட்டில்கலந்துகொண்டனர் மரண வீடு நடைபெற்றதிலிருந்து அடிக்கடி அந்த வீட்டுக்கு இவர்கள் போய் வந்தனர் வீட்டுக்காரர் இவர்கள் மீது சந்தேகம் கொள்ளவில்லை. வீட்டில் இவர்கள் சகஜமாக நடந்து கொண்டனர்.

கடந்த 7-ம் திகதி வீட்டுக்காரர் நகைகள் இருந்த பெட்டியை திறந்தபோதுதான் அங்கு நகைகள் எதுவும் இருக்காமை தெரியவந்தது தாலிக்கொடி 2 சங்கிலி மோதிரம் உட்பட 62 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டிருந்தன.

இதையடுத்தே வீட்டுக்காரருக்கு மேற்படி 3 பெண்கள் மீதும் சந்தேகம் எழுந்தது இச்சமயத்தில் இந்த 3 பெண்களும் மயிலிட்டியிலிருந்து காணாமல் போய் விட்டார்கள் இது குறித்து காங்கேசன்துறை பொலிசில் புகார் செய்யப்பட்டு பொலிசாரின் உதவியுடன் தேடுதல் நடத்திய சமயம் வரணியில் இவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு நகைகளிலும் பெரும் பகுதி இவர்களிடமிருந்து மீட்கப்பட்டன. இரண்டரை பவுண் நகைமட்டும் மீட்கப்படவில்லை,

காங்கேசன்துறை பொலிசைச் சேர்ந்த சார்ஜன்ட் கந்தரநாதன் சார்ஜன்ட் தியாகராஜா கான்ஸ்டபிள் மயில்வாகனம் ஆகியோரே இது குறித்து விசாரணை செய்து நகைகளையும் மீட்டு பெண்மணிகளையும் கைது செய்திருந்தனர்.

மூன்று பெண்மணிகளும் மல்லாகம் பதில் நீதபதி திரு ஜி வி. பாலசிங்கம் முன் ஆஜர் செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

## சட்டத்தரணிகள்

6-ம் பக்கம் பார்க்க

தொடர்புகொண்டதைத் தொடர்ந்தே சட்டத்தரணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டதாம்.

## மூவருடன் ஆலோசனை

குட்டிமணி, தங்கத்துரை, தேவன் ஆகிய மூவரையும் இக்குழு சந்தித்து ஆலோசனை நடத்தியது.

இச் சந்தேக நபர்கள் தொடர்பாக நீதமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆட்கொணர்வு மனுவை எதிர்த்து அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனைவை எதிர்த்து தாம் ஒரு மனு தாக்கல் செய்யப்போவதாகவும் இது குறித்து தாம் இச்சந்தேக நபர்களுடன் ஆலோசனை நடத்தியதாகவும் சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

குட்டிமணியும் சந்தேகநபர்களும் மிகவும் மெலிந்து காணப்பட்டனர் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

சி. வி. விவேகானந்தன், எஸ். நவரத்தினம், ரி. பாக்கியநாதன், கே. வி. எஸ். சிறிஸ்கந்தகுமார், கே. வி தவராசா ஆகியோரே சட்டத்தரணிகள் குழுவில் அங்கம் வகித்தனர், (ம-இ)

# நீதிமன்றத்தில் ஆஜராக்கக் கோருவர்

(கொழும்பு)

குட்டிமணியை இம்மாதம் 14ம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு தாம் கோர இருப்பதாக சட்டத்தரணிகள் குழுவினர் தெரிவித்தனர்.

ஓய்வுபெற்ற இன்ஸ்பெக்டர் குமார் கான்ஸ்டபிள் சிவநேசன் ஆகியோரைக் கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் குட்டிமணிமீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இம்மாதம் 14ம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படும்போது அவரை ஆஜர் செய்யத் தவறுமிடத்து தாம் நீதிமன்றத்திடம் அவரை ஆஜர் செய்யுமாறு கோரப் போவதாக நேற்று அவரைச் சந்தித்த சட்டத்தரணிகள் குழுவினர் தெரிவித்தனர்

ம-இ

## வன்செயல்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செயலக அதிகாரிகள், சர்வோதய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

சர்வோதய இயக்கத் தலைவர் தொடர்ந்து பேசுகையில், இந்நாட்டில் அரசியல் பிரச்னைகளால் ஏற்பட்டுள்ள அநர்த்தங்களையிட்டு தாம் வேதனைப் படுவதாகச் சொன்னார்.

இந்நாட்டில் வாழும் மக்கள் ஒவ்வொருவரும், ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதன் மூலம் நாட்டில் ஒற்றுமை ஏற்படும் என்றும் திரு. ஆரியரத்ன வற்புறுத்தினார்.

அழிவுகளுக்கு கூடுதலாகச் செலவழிக்கப்படும் பணத்தை அறிவுக்குப் பயன்படுத்தவேண்டும் என்றும், அன்பும், கருணையுமே நாட்டை நல்வழிப்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

## கிராம மட்டத்தில் ஒற்றுமை

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது: "ஒற்றுமையை கிராமமட்டத்திலிருந்து ஆரம்பிப்பதுதான் எமது நோக்கமும் - குறிக்கோளுமாகும்".

யாழ். திட்டமிடல் பணிப்பாளர் திரு. எஸ். சிவதாசன் மற்றும் திரு. திருநாவுக்கரசு ஆகியோரும் பேசினர்.

தொழிலதிபர் திரு. கே. கனகராசா அன்பளிப்புச் செய்த நெல்லிக்கன்று ஒன்றை திரு. ஆரியரத்ன கச்சேரி வளவில் நாட்டினார். மா

# கத்திமுனையில் தாலிக்கொடி அபகரிப்பு

பண்டத்தரிப்பு

கட்டுடையிலுள்ள வீடொன்றில் இரவு உட்புகுந்த முகமூடி அணிந்த திருடர்கள் வீட்டுக்காரரை கிறிஸ் கத்தியைக் காட்டிப் பயமுறுத்தி விட்டு அவரின் மனைவி அணிந்திருந்த 22 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க தாலிக்கொடியை அபகரித்துச் சென்றுள்ளனர். கட்டுடையைச் சேர்ந்த பொறியியலாளர் வில்லவராயர் வீட்டில இத்துணிகரக் கொள்ளைச் சம்பவம் நடைபெற்றது.

இக்கொள்ளைச் சம்பவம் பற்றி யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸ் கோஷ்டியினர் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்

# வழிபாடு குன்றியதே வன்முறைக்குக் காரணம்!

(யாழ்ப்பாணம்)

"உலகில் நடைபெறும் வன்முறைச் சம்பவங்களுக்கு, சக்தி வழிபாடு குன்றிவருவதே காரணமாகும். இந்துக்கள் அன்னைக்கே முதலிடம் அளிப்பவர்கள், நாயன்மார்கள் கூட தேவாரங்களில் அன்னையையே முதலில் போற்றிப் பாடியுள்ளார்கள். இன்று நாம் வாழும் நிலையில் அவனருள் எமக்கு அவசியமாகின்றது."

இவ்வாறு யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வாணிவிழா கலைவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய முன்னைநாள் அதிபர் திரு. எஸ். சபாலிங்கம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், "நவராத்திரி விரதம் ஒன்பது நாட்கள் அனுஷ்டிக்கப்படுகின்றன. இந்த ஒன்பது நாட்களும் எமக்குத் தேவையான சகல செல்வங்களையும், அவளைப் பாடி துதிசெய்து பெறுவது எமது பண்பாடு. இந்துக்களின் முக்கிய விரதங்கள் அனைத்தும் சக்தியையே முனைப்பாகக் கொண்டது" என்றார்.

விழாவில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (க)

## தேசிய இளைஞர் சேவை மன்றம்:

# இன மத வேறுபாடின்றி சேவையாற்றுகிறது

(சாவகச்சேரி)

"தேசிய இளைஞர் சேவை மன்றம் இந்த நாட்டில் வாழும் இளைஞர்களுக்கு இன, மத வேறுபாடற்றமுறையில் சேவையாற்றி நாட்டின் எதிர்கால மக்களாகிய இளைஞர்களிடையே விரக்தி மனப்பான்மையை இல்லாமற் செய்யவும் சகோதரத்துவத்தையும், சமாதானத்தையும் நிலைநாட்டப்பாடுபட்டு வருகிறது"

தேசிய இளைஞர் சேவை மன்ற ஆதரவில் குடும்ப நலனும் திட்டமிடலும் என்ற கருத்தரங்கிற்குத் தலைமைதாங்கிய யாழ் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திரு. க. சிவானந்தமூர்த்தி குறிப்பிட்டார்கள்.

அச்சுவேலி கிராமிய அபிவிருத்தி நிலையத்தில் நடந்த மேற்படி கருத்தரங்கில் பிரதி இயக்குநர் திரு அநாகேந்திரன், தேசிய இளைஞர் சேவை மன்றச் செயற்பாடுகள் குறித்து உரையாற்றினார்.

விஷக்கடி வைத்தியர் எஸ். சிற்றம்பலம், டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி, செண். யோண்ஸ் அம்புலன்ஸ் தலைவர் எஸ் இராசையா, வடமாகாண குடும்பத்திட்டமிடல் சங்கத் தலைவர் திரு. கலா பரமேஸ்வரன் ஆகியோரும் உரையாற்றினர். (கு)

# சுகாதார ஊழியர் குடும்பங்களுக்கு வீடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை சுகாதாரத் தொழிலாளர்களைச் சேர்ந்த எட்டுக் குடும்பங்களுக்கு எட்டு வீடுகளைக் கட்டிக்கொடுத்துள்ளது.

சுமார் 2 லட்சம் ரூபா செலவில் பண்ணையில் இவ்வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இவ்வீடுகள் எட்டையும், உரியவர்களிடம் யாழ். மேயர் கையளித்துள்ளார். (மா

## சதாத்தின்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டதுபோது அன்னாரது பாரியார் விம்மி விம்மி அழுதார்.

ஜனப் சதாத்தின் ஜனாஸாவுக்கு 81 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் நேரில் அஞ்சலி செலுத்தினார்கள்.

முதலில் இராணுவ அம்புலன்ஸ் வண்டியில் எடுத்துவரப்பட்ட அன்னாரின் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்திற்கு ஹெலிகொப்டர் விமானத்தில் கொண்டுவரப்பட்டு அடக்கம்செய்யப்பட்டது.

வெளிநாட்டு பிரதிநிதிகளுக்காக பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்தன குறிதவறாமல் சுடக்கூடிய துப்பாக்கி வீரர்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டிருந்தனர். (இ

# மரண அறிவித்தல்

## திருமதி மங்கையற்கரசி தில்லையம்பலம்

திருமதி தில்லையம்பலம் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு ஏ தில்லையம்பலத்தின் அன்பு மனைவியும், மகாலட்சுமி, தில்லைநாயகி, பரமேஸ்வரி (ஆசிரியை மட்டக்களப்பு), சிவகுமாரன் ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற நவரத்தினராஜா, மகாலிங்கம் (கல்வித்திணைக்களம் மட்டக்களப்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று ஞாயிற்றுக்கிழமை 11-10-81 காலை 10 மணியளவில் இலக்கம் 10, யாழ் கிளினர் ஒழுங்கையிலிருக்கும் அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 1203

இப்பத்திரிகையாழ்ப்பாணம் கிவன்கோவில் மேற்குவீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" [illegible] காங்கேசன்துறை [illegible] இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஒக்டோபர் 11-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper The General Post office: Sri Lanka. Regd. Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707. 689. 8186